


# டேபிள் டென்னிஸின் துரோணாச்சாரியர்கள்

## எஸ்.டி.ஏ.டி-ஏ.கே.ஜி டேபிள் டென்னிஸ் வளர்ச்சி மையம்




எஸ்.டி.ஏ.டி-ஏ.கே.ஜி டேபிள் டென்னிஸ் வளர்ச்சி மையம் ராவ் சகோதரர்கள் தலைமையில் தொடங்கப்பட்டது. ஒரே குடும்பத்திலிருந்து வந்த இந்த இரண்டு பயிற்சியாளர்கள் டேபிள் டென்னிஸ் உலகத்திற்கு தங்களையே அர்ப்பணித்துக் கொண்டனர். தற்போது ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் 12,000 சதுரஅடி பரப்பளவு கொண்ட கூடத்தில் அமைந்துள்ள இந்த மையம், அவர்களின் எளிமையான ஆரம்ப நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்டது ஆகும். அவர்களின் மகத்தான பங்களிப்பாலும், அயராத உழைப்பாலும் அவர்கள் அகாடமி நாட்டிலேயே ஒரு நல்ல வசதியான அகாடமியாக கருதப்படுகிறது. ஆந்திரப்பிரேதச மாநிலத்தில், ராஜமுந்திரியில் பிறந்து வளர்க்கப்பட்ட சீனிவாச ராவ், முரளிதர ராவ் சகோதரர்கள் தங்களின் 17, 13 வயதிலேயே டேபிள் டென்னிஸ் விளையாட ஆரம்பித்தனர். அவர்களின் நகரத்தில் இருந்த கிளப், ராவ் சகோதரர்களை டேபில் டென்னிஸ், பால் பாட்மிண்டன் மற்றும் செஸ் ஆகிய மூன்று விளையாட்டுகளில் ஈடுபட வைத்தது. ஆனால், அவர்கள் தங்கள் பெரிய அண்ணனின் டேபிள் டென்னிஸ் ராக்கெட் இருந்ததால், அந்த சிறியகாரணத்துக்காகவே டேபிள் டென்னிஸ் விளையாடுவதில் தீவிரம் காட்டினர். எனவே இந்த களத்திற்குள் அவர்கள் வந்தது தற்செயலாக நடந்ததே ஆயினும், அதுவே அவர்களின் வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகும் என்று அவர்கள் சிறிதும் நினைக்கவில்லை. விளையாட்டுடனான அவர்களின் நிகரற்ற ஈடுபாடு வெகு சீக்கிரமே அவர்களுக்கு வெற்றியைக் கொண்டு வந்தது. சீனிவாச ராவ் இரண்டு வருடத்திலேயே மாநில சாம்பியன் ஆனார். முரளிதர ராவ் அதே மாநில சாம்பியன்ஷிப் போட்டியில் ஐந்தாம் இடத்தைப் பிடித்தார். இருவரும் டபுள்ஸ் கேட்டகரியில் முதல் இடத்தைப் பிடித்தனர். சீனிவாச ராவ், 1973-ல் சென்னையில் நடந்த முதல் தேசிய விளையாட்டில் கலந்துக் கொண்டார். 1970-ல் தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் மற்றும் அர்ஜுன் அவார்ட் பெற்ற ஜி.ஜகன்னாத் அவர்களை இந்தோரில் நடந்த இரண்டாம் தேசிய விளையாட்டில் சந்தித்து பேசிய போது, அவரின் அன்பான ஊக்குவிக்கும் வார்த்தைகள் சீனிவாச ராவ் அவர்களின் ஆர்வத்தை மேலும் அதிகப்படுத்தியது.

சகோதரர்கள் இருவரும் 1975-76களில் சென்னையில் உள்ள அரசாங்கத் துறைகளில் பணியில் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தனர். இது அவர்களுக்கு ஒரு நிரந்தர வருமானம் கொடுத்தது. அவர்கள் விளையாடிய காலம் 11 வருடங்கள் மட்டுமே. அதில் அவர்கள் பல்கலைக்கழக, மாநில மற்றும் தேசிய அளவில் பல சாதனைகள் புரிந்தனர். தேசிய அளவில் போட்டியிடுவதற்கு தேவையான பயிற்சி நன்கு பெற்றிருந்தும், ஏதோ ஒரு குறையை உணர்ந்த அவர்கள், டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர்களாக ஆக வேண்டும் என்று விரும்பினர். சீனிவாச ராவ், நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ்-ல் அவரின் பயிற்சி முடிந்தவுடன், 1983-ல், டான் பாஸ்கோ பள்ளியில் பயிற்சியாளராக சேர்ந்தார். அதன் பிறகு உடனே, அவரது தம்பியும் அதே பள்ளியில் சேர்ந்து, பின் இருவரும் எஸ்.பி.ஒ.ஏ பள்ளி மற்றும் சாந்தோம் பள்ளியில் சேர்ந்து பயிற்சி கொடுக்க ஆரம்பித்தனர்.

ராவ் சகோதரர்கள், அவர்களின் பயிற்சிப் பயணத்தை ஆரம்பித்த போது, சென்னை முழுவதிலும் மூன்று பயிற்சி மையங்கள் மட்டுமே இருந்தது. 1984-ல் சாந்தோம் பள்ளியில் அவர்கள் ஆரம்பித்த பயிற்சி, பயிற்சி பெறுபவர்கள் நன்கு பயன் பெறுவார்கள் என்று நம்பப்பட்டதால் பள்ளியில் இருப்போர் மட்டும் அல்லாது வெளியோரும் அனுமதிக்கப்பட்டு, 1988 வரை நீடித்தது. அதற்கு பின், சகோதரர்கள் மைலாப்பூர் கிளப்பில் இருக்கும் 'யங் மென் இன்டியன் அஸோசியேஷன்'-க்கு மாறினார்கள். 1986-ல் பத்மா சேஷாத்ரி பள்ளியிலும் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்கிறது.

பி.புவனேஸ்வரி என்கிற 13 வயது சிறுமிக்கு டேபிள் டென்னிஸ் விளையாட்டில் நல்ல ஆற்றல் இருப்பது கண்டு, ராவ் சகோதரர்கள் கீழ் தீவிர பயிற்சி கொண்டு, பின் அவள் தேசிய அளவில் விளையாட தகுதி பெற்றாள். அண்டர்-13 மற்றும் அண்டர்-17 கேட்டகரியில் அவள் ரன்னர்-அப் ஆக வெற்றி பெற்றாள். அதற்கு பின், அவள் தமிழ் நாடு குழுவை தன் தலைமையில் நடத்தி, தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு விளையாடியதில், இரண்டு கேட்டகரியிலும் ஐந்தாவது இடத்தை அவர்கள் குழு வென்றது.

1990-ல் ராவ் சகோதரர்கள், தங்களிடம் தேவையான வளங்கள் இல்லாததால் சீனியர் விளையாட்டு






வீரர்களுக்கு பயிற்சி கொடுக்க முடியாத நிலையில் இருந்தார்கள். அதனால் அந்த விளையாட்டு வீரர்கள், நல்ல வசதிகள் இருக்கும் பெரிய பயிற்சி மையங்கள் நோக்கி சென்றனர். அந்த வருடமே, அவர்களுடைய பயிற்சி மையத்தின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களான சேத்தன்.பி.பபூர் மற்றும் எச்.ராமன் ஆகிய இருவரும் வேறு பயிற்சி மையம் சேர்ந்தனர். ராவ் சகோதரர்களால் பயிற்றுவிக்கப்பட்டு, ஒலிம்பிக்கில் விளையாடிய சேத்தன்.பி.பபூர், எச்.ராமன், ஷரத் கமல் மற்றும் நேஹா அகர்வால் ஆகியோரை பற்றி சொல்லி அவர்கள் மிகவும் பெருமிதம் கொள்கின்றனர்.

சீனிவாச ராவ் அவர்களின் 6 வயது மகனான ஷரத்துக்கு, ராவ் சகோதரர்கள் பயிற்சி ஆரம்பித்தனர். ஷரத் 2002-ல் முதல் தேசியப் போட்டியில் கலந்துக் கொண்டு ரன்னர் அப் வென்றான். ஷரத் பயிற்சியாளர் மீது நம்பிக்கை வைத்து, கொடுத்த குறிப்புகள் அனைத்தையும் துரிதமாக பின்பற்றியதால், அவருக்கு பயிற்சி அளித்தது சுலபமாக இருந்தது என்றும், ஆனால் மற்ற பயிற்சியாளர்கள் அவ்வாறு இல்லை என்றும், முரளிதர ராவ் சொல்கிறார்.

சுமார் 2003-ல் ராவ் சகோதரர்கள், நல்ல வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய பயிற்சி கூடம் ஆரம்பிக்க வேண்டி, தமிழ் நாடு ஸ்போர்ட்ஸ் அதாரிட்டி அவர்களை சந்தித்து ஒரு விண்ணப்பம் கொடுத்தனர். அவர்கள் நேரு ஸ்டேடியம் உள்ளே ஒரு இடத்தை பரிந்துரை செய்தனர். ஸ்டேடியம் உள்ளே அளிக்கப்பட்ட இடம் பெரியதாக இருப்பினும், தேவையான வசதிகள் குறைவாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக, ராவ் சகோதரர்கள் லைட்டிங், சாதனங்கள் மற்றும் பயிற்சிக்கு வேண்டிய வசதிகள் செய்ய, அந்த இடம் இன்று காணப்படும் பயிற்சி மையமாக தயாராகியது.

2005-06 கால கட்டதில், ராவ் சகோதரர்கள் தங்கள் அம்மாவின் நினைவால் ஏ.கே.ஜி அறக்கட்டளை துவங்கினார்கள். இந்த புதிய அகாடமி ஆரம்பித்த போது, முதலில் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் அந்த பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பிள்ளைகள் ஆவர். அதில் சிலர் மாநில, தேசிய அளவில் ஆடிய சாதனையாளர்களாயினும், அகாடமியில் அளிக்கப்படும் பயிற்சி, ஒழுக்கம் மற்றும் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பதற்கே என்று நம்பினர். ராவ் சகோதரர்கள், தாழ்த்தப்பட்ட பிண்ணனியிலிருந்து வந்த பிள்ளைகளுக்கு பயிற்சி கட்டணம் மிக குறைவாக அல்லது ஒன்றுமே வாங்காமலும், அதை ஈடு கட்ட மேல்தட்ட பிள்ளைகளிடம் கட்டணம் வசூல் செய்தனர். வார பயிற்சி திட்டத்தில், சுமார் 200 பிள்ளைகளுக்கு அவர்கள் பயிற்சி அளித்தனர். மாநில அளவு போட்டியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களில் சுமார் 60 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பிள்ளைகள். அகாடமி அவர்களுக்குத் தேவையான பயிற்சியும், விளையாட்டு சாதனங்களும் இலவசமாக கொடுப்பதோடு, பின்னாளில் வேண்டிய ஸ்பான்சரையும் கண்டுப்பிடித்து கொடுக்கின்றனர். உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் செயற்கை கால் பொருத்தியவர்களும் கூட அவர்களிடம் பயிற்சி பெறுகிறார்கள்.

ராவ் சகோதரர்களின் தினசரி வழக்கம், காலை 6 மணி முதல் 9 மணி வரை மற்றும், மாலை 4.30 மணி முதல் 7.30 மணி வரை மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் ஈடுபடுவதாகும். சீனிவாச ராவ் சென்னை மாவட்டத்தின் செயலாளராகவும், முரளிதர ராவ் தமிழ் நாடு மாநில அஸோசியேஷனின் துணைத் தலைவராகவும் சமீபத்தில் பதவி எடுத்துக் கொண்டனர். எனவே, அவர்கள் இருவரும் அகாடமியின் நிர்வாகத்தை தாங்கள் பார்த்துக் கொண்டு, தங்கள் பிள்ளைகளான ராஜத் கமல் மற்றும் ஷரத் கமல் இருவரும் எஸ்.டி.எ.டி-ஏ.கே.ஜி அகாடமியின் பயிற்சியை எடுத்து நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ராவ் சகோதரர்கள், நல்ல தகுதியுள்ள ஃபிட்னஸ் பயிற்சியாளர்களை வேலைக்கு எடுத்து அவர்களிடம் அகாடமியின் மாணவர்களுக்கு நன்றாக விளையாடுவதற்கு ஏற்ப தசையை வலுப்படுத்த எப்படி பயிற்சி கொடுக்க வேண்டும் என்று விளக்குகின்றனர். அதற்கேற்ப ஃபிட்னஸ் பயிற்சியாளர்கள் மாணவர்களின் விளையாடும் திறனை செம்மையாக்க, அவர்களுக்கு ஏற்றவாறு ஒரு ஃபிட்னஸ் செயல்முறையை தயார் செய்கின்றனர். 2018-ல் ஷரத் ஏஷியன் விளையாட்டுகளில் 2 மெடல் வாங்கிய பிறகு, சீனிவாச ராவ் அவர்களுக்கு துரோணாசார்யா விருது கொடுக்கப்பட்டது. ராவ் சகோதரர்கள் தாங்கள் பணி ஓய்வு பெற்ற கடைசி வருடம் வரை, அவரவரின் துறைகளின் சார்பாக, (வருமான வரி (சீனிவாச ராவ்); மத்திய எக்ஸ்சைஸ் (முரளிதர ராவ்)) அனைத்து இந்தியா அளவில் விளையாடி மெடல்கள் வாங்கி, தங்களின் துறைகளுக்கு பெருமை சேர்த்தனர்.

டேபிள் டென்னிஸ் வேகமாக வளரும் ஒரு விளையாட்டு ஆகும். 2018-ல் மூன்று தமிழ் நாட்டு விளயாட்டு வீரர்கள் ஏஷியன் கேம்ஸில் இரண்டு மெடல்கள் பெற்றனர். ராக்கெட்டில் இருக்கும் ரப்பர் மெட்டீரியல், பந்தின் அளவு, வீரர்களின் பயிற்சிக்கு உதவும் ரோபோக்கள் ஆகியவையே இந்த விளையாட்டு சவாலாகவும், உற்சாகம் ஊட்டுவதாகவும் இருக்க செய்பவை. அரசாங்கமும், வீரர்களின் வாழ்வாதாரம் மேம்படவும் புதிய வீரர்களை ஊக்கப்படுத்தவும், இந்த விளயாட்டுக்காக நிதி ஒதுக்கீடு செய்வது, பண பரிசுகள் மற்றும் அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு இட ஒதுக்கீடு என்று பல திட்டங்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். ராவ் சகோதரர்கள், பயிற்சி கொடுப்பதில் இருக்கும் பெரிய கஷ்டமே, வீரர்களின் விளையாட்டில் பெற்றோர்களின் தலையீட்டே என்று சொல்கிறார்கள். விளையாட்டின் நுட்பங்கள் ஏதும் தெரியாமல் இருக்கும் அவர்களின் அறியாமை என்று அதை அழைக்கிறார்கள். 'தலையிட வேண்டாம் என்று வேண்டிக் கொண்டால், உடனே பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளை இங்கிருந்து இழுத்து செல்கின்றனர். இப்போதெல்லாம் நிறைய பயிற்சி மையங்கள் இருக்கின்றன. இப்படி செய்வது பிள்ளைகளின் வளர்ச்சியை பாதிக்கும். இன்னொரு பிரச்னை, இந்த விளையாட்டை நேரடியாக பார்க்கும் வாய்ப்பு மிகவும் குறைவு' என்று வருந்துகின்றனர்.

இவ்வளவு குறைபாடுகள் இருந்தும், ராவ் சகோதரர்கள் 40 வருடங்களாக பல பிண்ணனியிலிருந்து வரும் பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுத்து, வெற்றி பெறவும் வழி காட்டி, இந்த விளையாட்டின் வளர்ச்சிக்கு தங்கள் வாழ்க்கையையே கொடுத்துள்ளனர். அகாடமியின் வளர்ச்சிக்கு இவர்களின் அயராத உழைப்பும், டேபில் டென்னிஸ் விளையாட்டுக்கு இவர்களின் அர்ப்பணிப்பையும் பாராட்டி, கே.எஸ்.ஏ டிரஸ்ட் இவர்களை சென்னையின் சாம்பியன் என்று பாராட்டுகிறது.

சுபாஷிணி கோமேஸ்வரன்